**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :- திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாள் வியாழக்கிழமை

IA.No.6/2023 in OS.No.72/2017

இராஜபாளையம் பழையபாளையம்,
கொட்டிமுக்கலூர் சத்திரிய ராஜூக்கள்,
பெரிய சாவடி, மூன்று பாகஸ்தர்களின் சங்கம்,
(பதிவு எண்.259/2011)
அதன் தலைவர் திரு.K.S.சகாதேவ ராஜா
மற்றும் செயலாளர் K.T.ராமசுப்பிரமணிய ராஜா
ஆகியவர்கள் மூலம் ... மனுதாரர்/வாதி

-எதிர்-

1) இராஜபாளையம், பழையபாளையம்,
சத்திரிய ராஜூக்கள் கொட்டிமுக்கலூர்
பூர்வீக பெரிய சாவடி,
ஆறு குடும்பத்தார் நல சங்கம்,
பதிவு எண்.191/2015,
கதவு எண்.50, தர்மராஜா பெரிய தெரு,
பழையபாளையம், இராஜபாளையம்,
தற்போது அதன் உபதலைவர்
திரு.K.P.தர்மகிருஷ்ண ராஜா அவர்கள் மூலம்

2) திரு.K.P.A.ஆனந்த ராஜா (இறப்பு)
த/பெ.K.P.அய்யனார்ராஜா,
கதவு எண்.223/1, மாடசாமி கோவில் தெரு, இராஜபாளையம் நகர்.

3) திரு.K.R.தர்மகிருஷ்ண ராஜா,
த/பெ.திரு.(லேட்) ராமகிருஷ்ணராஜா,
கதவு எண்.2, மாடசாமி கோவில் தெரு,
இராஜபாளையம் நகர்.

4) திரு.K.D.ஜெயகுருதேவ ராஜா,
த/பெ.திரு.(லேட்) தர்மலிங்கராஜா,
கதவு எண்.61, வச்சவாரி தெரு,
இராஜபாளையம் நகர்.

5) திரு.K.K.ராமராஜ் ராஜா,
த/பெ.திரு.கிருஷ்ணம ராஜா,
கதவு எண்.3, அழகுதேவன் குளம் ரோடு,
இராஜபாளையம் நகர்.

6) திரு.K.R.கிருஷ்ணம ராஜா,
த/பெ.திரு.ராமசாமி ராஜா,
கதவு எண்.123 மற்றும் 124,
ஒய்யம்புளி தெரு, இராஜபாளையம் நகர்.

7) திரு.K.K.மாடசாமி ராஜா,
த/பெ.திரு.K.N.கிருஷ்ணமராஜா,
கதவு எண்.60, நல்லையா ராஜா தெரு,
இராஜபாளையம் நகர்.

8) திரு.K.R.ரகுபதி ராஜா,
த/பெ.திரு.ராமசாமி ராஜா,
கதவு எண்.801, இந்திரா நகர்,
செட்டிகுளம் கிராமம், இராஜபாளையம் நகர்.

9) திரு.K.B.ராஜகோபால் ராஜா,
த/பெ.திரு.K.P.பீம ராஜா,
கதவு எண்.262, மாடசாமி கோவில் தெரு,
இராஜபாளையம் நகர்.

10) திரு.K.D.சுரேஷ் ராஜா,
த/பெ.திரு.K.A.துரை வெங்கட்ட ராஜா,
கதவு எண்.50, கி.மு.தெரு,
பழையபாளையம், இராஜபாளையம் நகர்.

11) திரு.K.A.துரைவெங்கட்ட ராஜா,
த/பெ.திரு.K.D.அர்ச்சுண ராஜா,
கதவு எண்.50, கி.மு.தெரு,
பழையபாளையம், இராஜபாளையம் நகர்.

12) திரு.K.S.ஜெகநாத ராஜா,
த/பெ.திரு.சின்ன வெங்கட்ட ராஜா,
கதவு எண்.25/H, அழகுதேவன் குளம் ரோடு,
இராஜபாளையம் நகர்.

13) திரு.K.N.ராமசுப்பிரமணிய ராஜா,
த/பெ.திரு.K.A.நாராயண ராஜா,
கதவு எண்.169, மாடசாமி கோயில் தெரு,
இராஜபாளையம் நகர்.

14) திரு.K.P.சதாசிவ ராஜா,
த/பெ.திரு.K.S.பாப்பு ராஜா,
கதவு எண்.52/1, நல்லைய ராஜா தெரு,
இராஜபாளையம் நகர்.

15) திரு.D.கஜேந்திர ராஜா,
த/பெ.திரு.துரைய ராஜா,
புதிய கதவு எண்.46, பழைய கதவு எண்.107/A,
வச்சவாரி தெரு, இராஜபாளையம் நகர்.

16) திரு.K.G.வெங்கடேசன்,
த/பெ.திரு.(லேட்) காந்தி ராஜா,
கதவு எண்.82, தர்மாபுரம் தெரு,
இராஜபாளையம் நகர்.

17) திரு.S.K.ராமசுப்ரமணிய ராஜா,
த/பெ.திரு.(லேட்) S.A.கிருஷ்ணம ராஜா,
கதவு எண்.186A, மாடசாமி கோவில் தெரு,
இராஜபாளையம் நகர்.

18) திரு.K.A.கேசவராஜா,
த/பெ.திரு.ஐயனார் ராஜா,
கதவு எண்.267, முடங்கியாறு ரோடு,
சம்பந்தபுரம் கிராமம், இராஜபாளையம் நகர்.
<u>தற்போதைய முகவரி</u>
கதவு எண்.11, பெரிய தம்பி தெரு,
தெற்குடையார் பாளையம் கிராமம்,
ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம்.

19) திரு.K.A.ஜெகநாதராஜா,
த/பெ.திரு.ஐயனார் ராஜா,
கதவு எண்.117, முடங்கியாறு ரோடு,
சம்பந்தபுரம் கிராமம், இராஜபாளையம் நகர்.
<u>தற்போதைய முகவரி</u>
கதவு எண்.11, பெரிய தம்பி தெரு,
தெற்குடையார் பாளையம் கிராமம், ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம்.

20) திரு.M.K.பாலகிருஷ்ணராஜா,
த/பெ.திரு.கிருஷ்ணமராஜா,
கதவு எண்.46/39, ரயில்வே பீடர் ரோடு,
இராஜபாளையம் நகர்.

21) திரு.N.P.சந்திர ராஜா,
த/பெ.திரு.பெருமாள் ராஜா,
கதவு எண்.124/A1, மாடசாமி கோவில் தெரு,
இராஜபாளையம் நகர்.

22) திரு.A.பெருமாள்,
த/பெ.திரு.அய்யனார்,
கதவு எண்.312, சமாதானம் தெரு,
இடையன்குளம் கிராமம் மற்றும் அஞ்சல்,
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா.

23) இந்திரயன் வங்கி,
இராஜபாளையம் கிளை,
Post Box No.16/825, தென்காசி ரோடு,
இராஜபாளையம் நகர்,
அதன் கிளை மேலாளர் மூலம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

24) திருமதி.A.லலிதா,
க/பெ.(லேட்) திரு.K.P.A.ஆனந்த ராஜா,
கதவு எண்.223/1, மாடசாமி கோவில் தெரு,
இராஜபாளையம் நகர்.

25) திருமதி.A.ஹரிஷா,
த/பெ.(லேட்) திரு.K.P.A.ஆனந்த ராஜா,
க/பெ.திரு.குருமனோஜ்,
கதவு எண்.223/1, மாடசாமி கோவில் தெரு,
இராஜபாளையம் நகர். ... எதிர்மனுதாரர்கள்/உத்தேச 24, 25ம் பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 19.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.M.சுரேஷ்குமார், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1, 3 முதல் 16 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.காளிதாஸ், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார், 17 முதல் 19 எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர் திரு.R.பெருமாள்சாமி,

B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 20 முதல் 22 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதரப்பாக்கப்பட்ட நிலையில் 23ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ராமசாமி அவர்கள் முன்னிலையாகியும், மனுஉரை, எதிர்உரை, குறிப்பாணை, எதிர் குறிப்பாணை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

காலம் சென்ற 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் 24, 25 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி கோரி, கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டப்பிரிவின் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர்/வாதி, இராஜபாளையம் பழையபாளையம், கொட்டிமுக்கலூர் சத்திரிய ராஜுக்கள், பெரிய சாவடி, மூன்று பாகஸ்தர்களின் சங்கத்தின் தலைவர். ஷை சங்கமானது சட்டப்படி பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. 1ம் பிரதிவாதி, சங்கம் சட்ட விரோதமானது என விளம்புகை செய்யக்கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி, கடந்த 21.09.2023 ஆம் தேதியன்று காலம்சென்றுவிட்டதால் அவரது மனைவி மற்றும் மகளான 24 மற்றும் 25 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. எனவே காலம் சென்ற 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் 24, 25 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>8ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 7, 9 முதல் 16, 24, 25 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்</u>**

2ம் பிரதிவாதியின் வாரிசுகளான அவரது மனைவி மற்றும் மகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோருவது ஏற்புடையதல்ல. ஏனெனில் அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களுக்கும், அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும்

கிடையாது. 1ம் பிரதிவாதி சங்கத்தின் தலைவராக இருந்து இறந்துவிட்ட காரணத்தினால் சங்கத்தின் நிர்வாகஸ்தராக இருந்த 2ம் பிரதிவாதி அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது 2ம் பிரதிவாதியின் ஸ்தானத்திற்கு 1ம் பிரதிவாதி சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றி தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். அதன்படி K.P.தர்மகிருஷ்ணராஜா தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் 1ம் பிரதிவாதி சங்கத்தின் உபதலைவர் என்று தவறாக காட்டியுள்ளனர். எனவே 24, 25 எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு முற்றிலும் தேவையற்ற தரப்பினர்கள். எனவே எதிர்மனுதாரர்களின் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரரது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் கோரிய பரிகாரத்தை அவருக்கு வழங்க வேண்டுமா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

மனுதாரர்/வாதியின் சங்கம் சார்பாக அசல் வழக்கினை தாக்கல் செய்து கொள்ளப்பட்டு 23 நபர்களை எதிர்வாதிகளாக காண்பிக்கப்பட்டிருந்து, வழக்கின் விசாரணை சமயத்தில் வழக்கில் இருந்த 23ம் எதிர்வாதியானவர் அவருடைய மனைவி மற்றும் மகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்றும் 23ம் எதிர்வாதியை தனிப்பட்ட முறையில் சேர்க்கப்பட்டதால் வழக்கில் அவரது வாரிசுகள் அவசியமான தரப்பினர்கள் என்றும் இம்மனுவை அனுமதிக்க வேண்டி தாக்கலாயிற்று. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்உரையையும், வாதுரையையும் பரிசீலிக்கும் பொழுது, எ.சா.ஆ.1 ஆவணம் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவில் உள்ள மனுதாரர்கள் கூறுவது போல் தனிப்பட்ட முறையில் அவரை இவ்வழக்கில் சேர்க்கப்பட்டதாக காணமுடியவில்லை, அசல் வழக்கில் கோரிய பரிகாரத்திற்கும் இம்மனுதாரர்களுக்கும் எவ்வித சம்பந்தமும், தொடர்பும் இல்லை என்பதால் இம்மனுவை

அனுமதிக்கக்கூடியதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 3ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI  Digitally signed by T V MANI
Date: 2025.07.03 18:19:56 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்

எ.சா.ஆ.1 – இராஜபாளையம், பழையபாளையம், சத்திரிய ராஜூக்கள் கொட்டிமுக்கலூர் பூர்வீக பெரிய சாவடி, ஆறு குடும்பத்தார் நல சங்கத்தின் தீர்மான புஸ்தகம் உண்மை நகல்

T V MANI  Digitally signed by T V MANI
Date: 2025.07.03 18:20:02 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
IA.No.6/2023 in OS.No.72/2017
**உத்தரவு நாள் – 03.072025**